# தமிழர் கல்விப் மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினாஎண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

எ+கா:

தமிழீழத்தின் தேசிய மலர் ___கார்த்திகைப்பூ___ .

(தாமரைப்பூ, செவ்வரத்தம்பூ, கார்த்திகைப்பூ)

1. பண்டாரவன்னியன் வீரச்சாவடைந்த இடத்தில்

_______________ நாட்டப்பட்டது.

( சாமிக்கல், நடுகல், படிக்கல் )

2. **ஒலிவட்டு:-**

பாட்டிக்குத் தேயிலையைக் குறைத்துக் கொடுத்த சிறுவன்

_______________ நாட்டைச் சேர்ந்தவன்.

( கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து )

3. 200 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் _______________ .

( இருநூறு, இருனூறு, இருணூறு )

4 . மேல் + சட்டை என்பதைச் சேர்த்து எழுதினால்

_______________ .

( மேல்சட்டை, மேற்சட்டை, மேற்ச்சட்டை )

5. பின்வருவனவற்றுள் வேறுபட்டசொல் _______________ .

( சிற்றுந்து, விண்ணுந்து, பேருந்து )

6. அதியர்மான் வேட்டையாடக் ________________ ச் சென்றான்.

( காட்டுக்கு, நாட்டுக்கு, ஊருக்கு )

7. செழியனின் ________________ நூல் நிலையத்திற்கு அருகே இருக்கிறது.

( வீடு, வீட்டுக்கு, வீட்டை )

8. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.

இதில் நாலு என்பது ________________ .

( திருக்குறள், நாலடியார், நல்வழி )

9. புறாவைக் காப்பாற்றியது ________________ .

( தும்பி, வண்டு, எறும்பு )

10. இசையோடு பாடி ஆடி நடிப்பதைக் ________________ என அழைப்பர்.

( கூத்து, இசை, ஓவியம் )

11. திருக்குறளை வேறு ________________ அழைப்பர்?

( எப்படி, என்ன, எது )

12. வில்லவராயமுதலியார் வீட்டுக்கு முன் நின்ற மரம் ________________ .

( மாமரம், பலாமரம், கொன்றைமரம் )

13. நட்பு என்பதன் எதிர்ச் சொல் ________________ .

( பொய், பெரிது, பகை )

14. முக்கனிகளில் ஒன்று ________________ .

( மாதுளை, மா, கொய்யா )

15. நான் நாளை இசைவிழாவில் ________________ .

( பாடுவேன், பாடினேன், பாடுகிறேன் )

16. **பழமொழி**

பூவுடன் சேர்ந்த ________________ மணக்கும்.

( காயும், நாரும், கனியும் )

17. அப்பா ________________ உணவைத் தம்பி விரும்பி உண்டான்.

( எழுதிய, சமைத்த, மலர்ந்த )

18. ________________ நன்றாக விளையாடினான்.

( அவள், அவர்கள், அவன் )

19. ஐயம் இன்றிக் கற்பது ________________ .

( வீரம், தெளிவு, அன்பு )

20. நாய் ________________ என்று குரைக்கும்.

( வள்வள், ஊஊ, மியாமியா )

| புள்ளிகள் 20 |
|---|

**2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| சலசல | கணீர்கணீர் | ~~மேடுபள்ளம்~~ |
| மடமட | இன்பதுன்பம் | ஏறஇறங்க |

எ+கா:

நான் பள்ளிக்குச் செல்லும் வீதி <u>மேடுபள்ளம்</u> ஆகக்காணப்பட்டது.

1. எமது வாழ்க்கையில் _______________ மாறிமாறி வரும்.

2. ஆற்று நீர் _______________ என்று ஓடியது.

3. தாத்தா இளநீரை _______________ என்று குடித்தார்.

4. வகுப்புக்கு வந்த புதிய ஆசிரியரை மாணவர் _______________ ப் பார்த்தனர்.

5. கோயில் மணி _______________ என்று ஒலித்தது.

புள்ளிகள் 10

## 3) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதி; சொல்லியங்களை நிறைவு செய்க.

எ+கா:

எறும்பு வேடனின் காலில் கடித்தது .

1. குழலி நாளை கலைவிழாவில் நாடகம் ________________ .

2. நேற்று நான் தமிழ்ப்பள்ளிக்குச் ________________ .

3. ஔவையார் ஆத்திசூடியை ________________ .

4. வன்னி அடங்காப்பற்று என ________________ .

5. வௌவால் தலை கீழாகத் ________________ .

புள்ளிகள் 10

## 4) ஒரு சொல்லில் விடை எழுதுக.

எ+கா:

பாக்கு நீரிணையை நீந்திக்கடந்தவர் யார்?

ஆழிக்குமரன் ஆனந்தன் .

1. கூத்துகள் நடைபெறும் இடங்களில் ஒன்றின் பெயரை எழுதுக.

_______________________________________ .

2. பொன்பூச்சொரியும் என்ற பாடலைப் பாடியவர் யார்?

_______________________________________ .

3. பரிசு நகரத்தின் ஊடாக ஓடும் ஆறு எது ?

_______________________________________ .

4. பட்டம் விட்ட விலங்கு எது ?

_______________________________________ .

5. கடலில் செல்லும் உந்தின் பெயர் என்ன?

_______________________________________ .

புள்ளிகள் 10

## 5) கீறிட்ட இடத்தில் பொருத்தமாக எழுதுவோம்.

**எ+கா:**

நேற்றுப் ____பனி____ கொட்டியது.

( பணி, ~~பனி~~ )

1. பாரி ஒரு ____________ வள்ளல்.

( சிரந்த, சிறந்த )

2. பூக்கள் ____________ வீசும்.

( நறுமணம், நறுமனம் )

3. வாழைப்பழம் ____________ நிறம்.

( மஞ்சழ், மஞ்சள் )

4. வானவில் ____________ இருக்கும்.

( அழகாக, அலகாக )

5. நான் ____________ இலண்டனுக்குச் சென்றேன்.

( தொடருந்தில், தொடறுந்தில் )

| புள்ளிகள் 05 |
|---|

6) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மு | த் | து | மா | லை | சு | றா |
| சி | மோ | சி | ல | ந் | தி | தோ |
| ங் | தி | த | மெ | ட் | டி | டு |
| க | ர | ம் | வ | ல் | லூ | று |
| ம் | ம் | பி | ச | ங் | கி | லி |
| வ | ளை | ய | ல் | ப | ல் | லி |

| | உயிரற்றவை | உயிருள்ளவை |
|---|---|---|
| எ+கா: | முத்துமாலை | சிங்கம் |
| | 1. ______ | 1. ______ |
| | 2. ______ | 2. ______ |
| | 3. ______ | 3. ______ |
| | 4. ______ | 4. ______ |
| | 5. ______ | 5. ______ |

புள்ளிகள் 10

7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து; கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| வெற்றி | ~~விளையாட்டு~~ | இல்லங்கள் |
| உயரம்பாய்தல் | முதலாவதாக | காந்தள் |

இலக்கியனின் தமிழ்ப்பள்ளியில் இல்ல விளையாட்டு ப் போட்டி நடைபெற்றது. அவனது பள்ளியில் காந்தள், வாகை முல்லை என மூன்று __________ இருக்கின்றன. இலக்கியனின் இல்லத்தின் பெயர் __________ . இல்ல விளையாட்டுப் போட்டி நண்பகல் ஒரு மணிக்குத் தொடங்கியது. அன்று நீளம்பாய்தல், ஓட்டம், __________ போன்ற போட்டிகள் நடைபெற்றன. இலக்கியன் ஓட்டப்போட்டியில் __________ வந்தான். இறுதியில் இலக்கியனின் இல்லமே __________ பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இலக்கியன் பெரிதும் மகிழ்ந்தான்.

புள்ளிகள் 10

## 8) பந்தியைப் படித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒரு நாள் ஓர் ஓநாய் பசியால் அலைந்து திரிந்தது. அது கடைசியில் ஒரு குளக்கரையில் ஓர் ஆமையைக் கண்டது. தனது பற்களால் ஆமையைக் கடித்தது. ஆமை தன் கால்களையும் தலையையும் உள்ளே இழுத்துக்கொண்டது. ஒரு கல்லைப் போல் ஆமை அசையாமல் கிடந்தது. ஓநாயால் ஆமையைக் கடிக்க முடியவில்லை. அப்போது ஆமை அண்ணா என்னை நீங்கள் இந்தக் குளத்தில் ஊறப் போட்டுவிடுங்கள் அப்போது தான் எளிதாகக் கடித்து உண்ணமுடியும் என்று கூறியது. ஓநாய் அதனை உண்மை என நம்பியது. ஆமையை வாயால் தூக்கிக் குளத்தில் போட்டது. புத்தியுள்ள ஆமை தண்ணீருக்குள் ஓடி மறைந்தது.

**எ+கா:**

எது பசியால் அலைந்து திரிந்தது?

ஓநாய் ______________________ .

1. ஓநாய் எதைக் கண்டது?

______________________ .

2. ஆமை எங்கே இருந்தது?

______________________ .

3. ஆமை எதைப்போல் அசையாமல் கிடந்தது?

______________________ .

4. தன்னை எதற்குள் போடும்படி ஆமை கூறியது?

______________________ .

5. எது தண்ணீருக்குள் ஓடி மறைந்தது?

______________________ .

புள்ளிகள் 10

## 9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15